## அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
## அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

பேச்சு 2015 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள்

வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

# இயற்கையைப் பாதுகாப்போம்!

‘

**இயற்கை என்பது நம் பூமியின் அழகும், நம் வாழ்வின் ஆதாரமும் ஆகும். மரங்கள் இல்லாமல் நாம் சுத்தமாக சுவாசிக்க முடியாது. அவை நமக்கு காற்றைத் தரும், மழையை வரச் செய்யும். அதனால், பழங்கள், காய்கறிகள் போன்றன விளைகின்றன.**

**ஆனால், இன்று நெகிழிகளின் பாவனை அதிகரித்துச் செல்கின்றது, இயற்கை மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகின்றது. எங்கும் நெகிழிகள் எதிலும் நெகிழிகள் என, பூமிப்பந்து நெகிழிகளால் நிரம்பி வருவது அச்சமூட்டுகின்றது. மனிதர்களின் முறை அற்ற செயல்களால் பூமிப்பந்து பசுமையை இழந்து, நாம் வாழும் சூழல் கடும் பாதிப்பிற்கு உள்ளாகின்றது.**

**மனிதர்கள் மரங்களை வெட்டி வீடுகள், சாலைகள், தொழிற்சாலைகள் கட்டுகின்றனர். இதனால் காற்று மாசடைகின்றது, மழை குறைகின்றது, விலங்குகள் தங்கள் வாழ்விடங்களை இழக்கின்றன. இது நாம் வாழும் பூமிக்குப் பெரும் இயற்கை அழிவை ஏற்படுத்துகின்றது. காலநிலை மாற்றம் மனிதகுலத்திற்கு ஏற்படுத்தும் பேரழிவைக் கண்களால் பார்க்கின்றோம் அல்லவா?**

**எனவே நாம் ஒவ்வொருவரும் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும். இது நம் கடமையும் பொறுப்பும் ஆகும். ”சிறு துளி பெரு வெள்ளம்” என்பது போல, நாம் வாழும் சூழலை நாமே பாதுகாப்போம்.**

**இயற்கையைப் பாதுகாப்போம். நம் பூமிப்பந்தை அழிவில் இருந்து காப்போம் !’**

**நன்றி**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.
மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.